உள்ளது நாற்பது

அனுபந்தத்துடன்.

1928

All rights reserved]

[விலை 0 1 0

சுவாமி சுத்தாநந்த பாரதியார்

இயற்றிய நூல்கள்.

1.	அறநூல் (மூலமும் உரையும்).	0	12	0
2.	ஷை மூலம்.	0	3	0
3.	ராமகிருஷ்ணாமிருதம்.	0	6	0
4.	வீரசிவாஜி விஜயம்.	0	3	0
5.	புத்த விஜயம்.	0	4	0
6.	ஜிணாந்தம்.	0	8	0
7.	ஏசுநாதர் சரிதை.	0	6	0
8.	ஜாதுஷ்டிரன்.	0	1	0
9.	பாரத கீதம் (முதல்பாகம்).	0	2	0
10.	,, (இரண்டாம்பாகம்).	0	2	0
11.	அறநூல் (ஆங்கிலம் அச்சில்).	0	4	0

ஸ்ரீ ரமணீயவாணி புத்தகாலயம்.

திருவண்ணாமலை.



ஸ்ரீ ரமண மஹர்ஷிகள்.

திருவண்ணாமலை.

உ

உள்ளது நாற்பது

(அனுபந்தத்துடன்).

இது

திருவண்ணாமலை

ஸ்ரீரமணமஹர்ஷியவர்களால்

அருளப்பெற்று

ஸ்ரீ ரமணீயவாணி புத்தகாலயத்தாரால்

பிரசுரிக்கப்பட்டது.

முதற்பதிப்பு.

1000 காபிகள்.

நாகராஜா பிரிண்டிங் ஒர்க்ஸ், திருவண்ணாமலை.

1928.

All rights reserved] [விலை அணா ஒன்று.

பாயிரம்.

வெண்பா.

1. மெய்யி னியல்புமதை மேவுந் திறனுமெமக்
குய்யும் படிமுருக ஞேதுகெனப் — பொய்யுலகின்
கள்ளமறு மாற்றுற் கனரமணன் கட்டுரைத்தா
னுள்ளது நாற்ப துவந்து.

2. தனவும் பிறமொழிக டந்தனவுங் கூட்டி
யனுபந்த மாக வளித்த — பனுவலோ
டுள்ளது நாற்பதை யோதி யுணர்ந்தொழுகுந்
தெள்ளியோர் சேர்ந்தார் சிறப்பு.

பாயிரம் முற்றிற்று.

உள்ளது நாற்பது.

மங்கலம்.

வெண்பா.

1. உள்ளதல துள்ளவுணர் வுள்ளதோ வுள்ளபொரு
ளுள்ளலற வுள்ளத்தே யுள்ளதா — லுள்ளமெனு
முள்ளபொரு ளுள்ளலெவ னுள்ளத்தே யுள்ளபடி
யுள்ளதே யுள்ள லுணர்.

2. மரணபய மிக்குளவம் மக்களர ணாக
மரணபவ மில்லா மகேசன் — சரணமே
சார்வர்தஞ் சார்வொடுதாஞ் சாவுற்றார் சாவெண்ணஞ்
சார்வரோ சாவா தவர்.

நூல்.

1. நாமுலகங் காண்டலா னானாஞ் சத்தியுள
வோர்முதலை யொப்ப லொருதலையே — நாமவுருச்
சித்திரமும் பார்ப்பானுஞ் சேர்படமு மாரொளியு
மத்தனையுந் தானா மவன்.

2. மும்முதலை யெம்மதமு முற்கொள்ளு மோர்முதலே
மும்முதலாய் நிற்குமென்று மும்முதலு—மும்முதலே
யென்னலகங் கார மிருக்குமட்டே யான்கெட்டுத்
தன்னிலையி னிற்ற றலை.

3. உலகுமெய்பொய்த் தோற்ற முலகறிவா மன்றென்
றுலகுசுக மன்றென் றுரைத்தெ — னுலகுவிட்டுத்
தன்னையோர்ந் தொன்றிரண்டு தானற்று நானற்ற
வந்நிலையெல் லார்க்குமொப் பாம்.

4. உருவந்தா னாயி னுலகுபர மற்று
முருவந்தா னன்றே லுவற்றி — னுருவத்தைக்
கண்ணுறுதல் யாவனெவன் கண்ணலாற் காட்சியுண்
கண்ணதுதா னந்தமிலாக் கண். [டோ

5. உடல்பஞ்ச கோச வுருவதனா லைந்து
முடலென்னுஞ் சொல்லி லொடுங்கு — முடலன்றி
யுண்டோ வுலக முடல்விட் டுலகத்தைக்
கண்டா ருளரோ கழறு.

6. உலகைம் புலன்க ளுருவேறன் றவ்வைம்
புலனைம் பொறிக்குப் புலனா — முலகைமன
மொன்றைம் பொறிவாயா லோர்ந்திடுத லான்மனத்தை
யன்றியுல குண்டோ வறை.

7. உலகறிவு மொன்றா யுதித்தொடுங்கு மேனு
முலகறிவு தன்னா லொளிரு — முலகறிவு
தோன்றிமறை தற்கிடனாய்த் தோன்றிமறை யாதொளி
பூன்றமா மஃதே பொருள். [ரும்

8. எப்பெயரிட் டெவ்வுருவி லேத்தினுமார் பேருருவி
லப்பொருளைக் காண்வழிய தாயினுமம்-மெய்ப்பொருளி
னுண்மையிற்ற னுண்மையினை யோர்ந்தொடுங்கி யொ
யுண்மையிற் காண லுணர். [ன்றுதலே

9. இரட்டைகண் முப்புடிக ளென்றுமொன்று பற்றி
யிருப்பவா மவ்வொன்றே தென்று — கருத்தினுட்
கண்டாற் கழலுமவை கண்டவ ரேயுண்மை
கண்டார் கலங்காரே காண்.

10. அறியாமை விட்டறிவின் றுமறிவு விட்டவ்
வறியாமை யின்றாகு மந்த — வறிவு
மறியா மையுமார்க்கென் றம்முதலாந் தன்னை
யறியு மறிவே யறிவு.

11. அறிவுறுந் தன்னை யறியா தயலை
யறிவ தறியாமை யன்றி — யறிவோ
வறிவயற் காதாரத் தன்னை யறிய
வறிவறி யாமை யறும்.

12. அறிவறி யாமையு மற்றதறி வாமே
யறியும தூண்மையறி வாகா —தறிதற்
கறிவித்தற் கன்னியமின் றாயவிர்வ தாற்றா
னறிவாகும் பாழன் றறி.

13. ஞானமாந் தானேமெய் நானாவா ஞானமஞ்
ஞானமாம் பொய்யாமஞ் ஞானமுமே — ஞானமாந்
தன்னையன்றி யின்றணிக டாம்பலவும் பொய்மெய்யாம்
பொன்னையன்றி யுண்டோ புகல்.

14. தன்மையுண்டேன் முன்னிலைப டர்க்கைக டாமுளவாந்
தன்மையி னுண்மையைத் தானாய்ந்து—தன்மையறின்
முன்னிலைப டர்க்கை முடிவுற்றொன் றாயொளிருந்
தன்மையே தன்னிலைமை தான்.

15. நிகழ்வினைப் பற்றி யிறப்பெதிர்வு நிற்ப
நிகழ்கா லவையு நிகழ்வே — நிகழ்வொன்றே
யின்றுண்மை தேரா திறப்பெதிர்வு தேரவுண
லொன்றின்றி யெண்ண வுனல்.

16. நாமன்றி நாளேது நாடேது நாடுங்கா
னாமுடம்பே னாணாட்டு ணாம்படுவ — நாமுடம்போ
நாமின்றன் றென்றுமொன்று நாடிங்கங் கெங்குமொ
னாமுண்டு நாணாடி னாம். [ன்றா

17. உடனானே தன்னை யுணரார்க் குணர்ந்தார்க்
குடலளவே நான்ற னுணரார்க் — குடலுள்ளே
தன்னுணர்ந்தார்க் கெல்லையறத் தானொளிரு நானிதுவே
யின்னவர்தம் பேதமென வெண்.

18. உலகுண்மை யாகு முணர்வில்லார்க் குள்ளார்க்
குலகளவா முண்மை யுணரார்க் — குலகினுக்
காதார மாயுருவற் றாருமுணர்ந் தாருண்மை
யீதாகும் பேதமிவர்க் கென்.

19. விதிமதி மூல விவேக மிலார்க்கே
விதிமதி வெல்லும் விவாதம் — விதிமதிகட்
கோர்முதலாந் தன்னை யுணர்ந்தா ரவைதணந்தார்
சார்வரோ பின்னுமவை சாற்று.

20. காணுந் தனைவிட்டுத் தான்கடவு ளைக்காணல்
காணு மனோமயமாங் காட்சிதனைக் — காணுமவன்
றான்கடவுள் கண்டானாந் தன்முதலைத் தான்முதல்போ
தான்கடவு ளன்றியில தால். [ய்த்

21. தன்னைத்தான் காண றலைவன் றனைக்காண
லென்னும்பன் னூலுண்மை யென்னையெனின் — றன்
னைத்தான்
காணலெவன் றானொன்றாற் காணவொணா தேற்றலை
காணலெவ னூணாதல் காண். [வற்

22. மதிக்கொளி தந்தம் மதிக்கு ளொளிரு
மதியினை யுள்ளே மடக்கிப் — பதியிற்
பதித்திடுத லன்றிப் பதியை மதியான்
மதித்திடுத லெங்ஙன் மதி.

23. நானென்றித் தேக நவிலா துறக்கத்து
நானின்றென் றாரு நவில்வதிலை — நானொன்
றெழுந்தபி னெல்லா மெழுமிந்த நானெங்
கெழுமென்று நுண்மதியா லெண்.

24. சடவுடனா னென்னாது சச்சித் துதியா
துடலளவா நானொன் றுதிக்கு — மிடையிலிது
சிச்சடக்கி ரந்திபந்தஞ் சீவனுட்ப மெய்யகந்தை
யிச்சமு சாரமன மெண்.

25. உருப்பற்றி யுண்டா முருப்பற்றி நிற்கு
முருப்பற்றி யுண்டுமிக வோங்கு — முருவிட்
டுருப்பற்றுந் தேடினா லோட்டம் பிடிக்கு
முருவற்ற பேயகந்தை யோர்.

26. அகந்தையுண் டாயி னனைத்துமுண் டாகு
மகந்தையின் றேலின் றனைத்து — மகந்தையே
யாவுமா மாதலால் யாதிதென்று நாடலே
யோவுதல் யாவுமென வோர்.

27. நானுதியா துள்ளநிலை நாமதுவா யுள்ளநிலை
நானுதிக்குந் தானமதை நாடாம — னானுதியாத்
தன்னிழப்பைச் சார்வதெவன் சாராமற் றானதுவாந்
தன்னிலையி னிற்பதெவன் சாற்று.

28. எழும்பு மகந்தை யெழுமிடத்தை நீரில்
விழுந்த பொருள்காண வேண்டி — முழுகுதல்போற்
கூர்ந்தமதி யாற்பேச்சு மூச்சடக்கிக் கொண்டுள்ளே
யாழ்ந்தறிய வேண்டு மறி.

29. நானென்று வாயா னவிலாதுள் ளாழ்மனத்தா
னானென்றெங் குந்துமென நாடுதலே — ஞானநெறி
யாமன்றி யன்றிதுநா னாமதுவென் றுன்னறுணை
யாமதுவி சாரமா மா?

30. நானா ரெனமனமுண் ணாடியுள நண்ணவே
நானா மவன்றலை நாணமுற — நானானாத்
தோன்றுமொன்று தானாகத் தோன்றினுநா னன்று
பூன்றமது தானாம் பொருள். [பொருள்

31. தன்னை யழித்தெழுந்த தன்மயா னந்தருக்
கென்னை யுளதொன் றியற்றுதற்குத் — தன்னையலா
தன்னிய மொன்று மறியா ரவர்நிலைமை
யின்னதென் றுன்ன லெவன்.

32. அதுநீயென் றம்மறைக ளார்த்திடவுந் தன்னை
யெதுவென்று தான்றேர்ந் திராஅ — ததுநா
னிதுவன்றென் றெண்ணலுர னின்மையினா லென்று
மதுவேதா னாயமர்வ தால்.

33. என்னை யறியேனா னென்னை யறிந்தேனா
னென்ன னகைப்புக் கிடனாகு — மென்னை
தனைவிடய மாக்கவிரு தானுண்டோ வொன்றா
யனைவரநு பூதியுண்மை யால்.

34. என்றுமெவர்க்கு மியல்பா யுளபொருளை
யொன்று முளத்து ளுணர்ந்துநிலை — நின்றிடா
துண்டின் றுருவருவென் றொன்றிரண் டன்றென்றே
சண்டையிடன் மாயைச் சழக்கு.

35. சித்தமா யுள்பொருளைத் தேர்ந்திருத்தல் சித்திபிற
சித்தியெலாஞ் சொப்பனமார் சித்திகளே — நித்திரை
விட்
டோர்ந்தா லவைமெய்யோ வுண்மைநிலை நின்றுபொய்
தீர்ந்தார் தியங்குவரோ தேர். [ம்மை

36. நாமுடலென் றெண்ணினல நாமதுவென் றெண்ணு
மது
நாமதுவா நிற்பதற்கு நற்றுணையே — யாமென்று
நாமதுவென் றெண்ணுவதே னென்மனித னென்றெ
நாமதுவா நிற்குமத னால். [ணுமோ

37. சாதகத்தி லேதுவிதஞ் சாத்தியத்தி லத்துவித
மோதுகின்ற வாதமது முண்மையல — வாதரவாய்த்
தான்றேடுங் காலுந் தனையடைந்த காலத்துந்
தான்றசம னன்றியார் தான்.

38. வினைமுதனா மாயின் வினைபயன் றுய்ப்போம்
வினைமுதலா ரென்று வினவித் — தனையறியக்
கர்த்தத் துவம்போய்க் கருமமூன் றுங்கழலு
நித்தமா முத்தி நிலை.

39. பத்தனா னென்னுமட்டே பந்தமுத்தி சிந்தனைகள்
பத்தனா ரென்றுதன்னைப் பார்க்குங்கால் — சித்தமாய்
நித்தமுத்தன் றானிற்க நிற்காதேற் பந்தசிந்தை
முத்திசிந்தை முன்னிற்கு மோ.

40. உருவ மருவ முருவருவ மூன்றா
முறுமுத்தி யென்னி லுரைப்ப — லுருவ
மருவ முருவருவ மாயு மகந்தை
யுருவழிதன் முத்தி யுணர்.

உள்ளது நாற்பது
முற்றிற்று.

உ

அநுபந்தம்.

மங்கலம்.

விருத்தம்.

எதன்கண்ணே நிலையாகி யிருக்கிடுமிவ் வுலகமெலா
மெதன தெல்லா
மெதனின்றிவ் வனைத்துலகு மெழுமோமற் றிவையாவு
மெதன்பொ ருட்டா
மெதனாலிவ் வையமெலா மெழுந்திடுமிவ் வெல்லாமு
மெதுவே யாகு
மதுதானே யுளபொருளாஞ் சத்தியமா மச்சொருப
மகத்தில் வைப்பாம்.

நூல்.

வெண்பா.

1. சத்திணக் கத்தினற் சார்பகலுஞ் சார்பகலச்
சித்தத்தின் சார்பு சிதையுமே — சித்தச்சார்
பற்றா ரிலவிலதி லற்றார்சீ வன்முத்தி
பெற்றா ரவரிணக்கம் பேண்.

2. சாதுக்க ளாவார் சகவாச நண்ணினு
லேதுக்கா மிந்நியம மெல்லாமு — மேதக்க
தண்டென்றன் மாருதந் தான்வீச வேவிசிறி
கொண்டென்ன காரியநீ கூறு.

3. தாபந்தண் சந்திரனுற் றைனியநற் கற்பகத்தாற்
பாபந்தான் கங்கையாற் பாறுமே — தாபமுத
லிம்மூன்று மேகு மிணையில்லா சாதுக்
டம்மா தரிசனத்தாற் றான்.

4. கம்மயமாந் தீர்த்தங்கள் கன்மண்ணுந் தெய்வங்க
ளம்மகத்துக் கட்கிணையே யாகாவா — மம்மவவை
யெண்ணினு ளாற்றாய்மை யேய்விப்ப சாதுக்கள்
கண்ணினுற் கண்டிடவே காண்.

5. தேவஞ் ரார்மனந் தேருவ னென்மன
மாவியா மென்னு லறிபடுமே — தேவனீ
யாகுமே யாகையா லார்க்குஞ் சுருதியா
லேகனுந் தேவனே யென்று.

விருத்தம்.

6. ஒளியுனக் கெதுபக லினனெனக் கிருள்விளக்
கொளியுண ரொளியெது கணதுண ரொளியெது
வொளிமதி மதியுண ரொளியெது வதுவக
மொளிதனி லொளியுநீ யெனகுரு வகமதே.

வேறு.

7. இதயமாங் குகையி னுப்பு ணேகமாம் பிரம்ம மாத்ர
மதுவக மக்மர் நேரே யவிர்ந்திடு மான்மா வர்க
விதயமே சார்வாய் தன்னை யெண்ணியா ழலது வர்யு
வதனுட னுழ்ம னத்தா லான்மாவி னிட்ட னுவாய்.

வெண்பா.

8. அகக்கம லத்தே யமல வசல
வகமுருவ மாகு மறிவே — தகத்தை
யகற்றிடுவ தாலவ் வகமா மறிவே
யகவீ டளிப்ப தறி.

விருத்தம்.

9. தேகங் கடநிகர் சடமிதற் ககமெனுந் திகழ்விலதா
ஞகஞ் சடலமி றுயிலினி றினமுறு நமதியலாற்
கோகங் கரனெவ ஞுளனுணர்ந் துளருளக் குகையுள்ளே
சோகம் புரணவ ருணகிரி சிவவிபு சுயமொளிர்வான்.

வெண்பா.

10. இழிவுடல்யா னென்ன லிகந்திடுக வென்று
மொழிவிலின் பாத்தன்னை யோர்க — வழியு
முடலோம்ப லோடுதனை யோரவுனல் யாறு
கடக்கக் காராப்புணைகொண் டற்று.

விருத்தம்.

11. இருமுலை நடுமார் படிவயி றிதன்மே
லிருமுப் பொருளுள நிறம்பல விவற்று
ளொருபொரு ளாம்பல ரும்பென வுள்ளே
யிருவிரல் வலத்தே யிருப்பது மிதயம்.

வேறு.

12. அதன்முக மிகலுள தகமுள சிறுதுளை
யதனிலா சாதியொ டமர்ந்துள திருந்தம
மதனையா சிரித்துள வகிலமா நாடிக
ளதுவளி மனமொளி யவற்றின திருப்பிடம்.

வேறு.

13. இதயமலர்க் குகையகமா யிலிகிறையே குகேசனென
வேத்தப் பட்டோ
னிதமனைய குகேசன்யா னெனுஞ்சோகம் பாவனைதா
னின்னு டம்பிற்
றிதமுறுநா னெனுந்திடம்போ லப்பியாச பலித்தாலத்
தேவாய் நிற்கிற்
சிதையுடனு னெனுமவித்தை செங்கதிரோ னெதிரிருள்-
போற் சிதையு மன்றே.

வெண்பா.

14. அகில வுபாதி யகன்ற வறிவே
தகமச் சிவமென் றனிச — மகித்தே
யகலாத் தியான மதனு லகத்தி
னகிலவா சத்தி யகற்று.

15. மக்கண் மனைவிமுதன் மற்றவர்க ளற்பமதி
மக்கட் கொருகுடும்ப மானவே — மிக்ககல்வி
யுள்ளவர்க முள்ளத்தே யொன்றலபன் னூற்குடும்ப
முள்ள துயோ கத்தடையா யோர்.

16. எழுத்தறிந்த தாம்பிறந்த தெங்கேயென் றெண்ணி
யெழுத்தைத் தொலைக்க, வெணுதோ — ரெழுத்தறிந்
தென்
சத்தங்கொ ளெர்திரத்தின் சால்புற்றுர் சோணகிரி
வித்தகனே வேறூர் விளம்பு.

17. கற்று மடங்காரிற் கல்லாதா ரேயுய்ந்தார்
பற்று மதப்பேயின் பாலுய்ந்தார் — சுற்றுபல
சிந்தைவாய் நோயுய்ந்தார் சீர்தேடி யோடலுய்ந்தா
ருய்ந்ததொன் றன்றென் றுணர்.

18. எல்லா வுலகுந் துரும்பா யினுமறைக
ளெல்லாமே கைக்கு ளிருந்தாலும் — பொல்லாப்
புகழ்ச்சியாம் வேசிவசம் புக்கா ரடிமை
யகலவிட லம்மா வரிது.

19. தானன்றி யாருண்டு தன்னையா ரென்சொலினென்
றூன்றன்னை வாழ்த்துகினுந் தாழ்த்துகினுந் — தானென்ன
தான்பிறரென் றோராமற் றன்னிலையிற் போமாற்
றூனென்று நின்றிடவே தான்.

20. அகிலவே தாந்தசித் தாந்தசா ரந்தை
யகமுண்மை யாக வறைவ — னகஞ்செத்
தகமது வாகி லறிவுரு வாமவ்
வகமதே மிச்ச மறி.

அநுபந்தம்.
முற்றிற்று.

தலைப்புக்கவி.

அகவல்.

மெய்தன வுள்மரநா மூலமும் மூலகுமெய்
யுருவந் தானுட லுலகைம் மூலகறி
வெப்பெய ரிரட்டை யறியா வறிவுறு
மறிவறி ஞானமாந் தன்மை நிகழ்வி
நாமன் றுடனு னுலகுண் விதிகாண்
டன்னைத் தான்மதி நானென் றிச்சட
வுருப்பற் றகந்தைநா னுதியா தெழும்பு
நானென்று நானார் தன்னை யழித்தது
வென்னை யென்றுஞ் சித்த நாமுடல்
சாதக வினைமுதல் பத்த னுருவம
வெதன்சத் சாது தாபகம் தேசொளி
யித்யமா மகக்கம தேக மிழிவிரு
வதனித யமல ரகிலவு மக்கெழு
கற்றெல் தானகி லவேயறு பத்தைந்
திவைபா யிரமங் கலமனு பந்தமோ
டுள்ளது நாற்பதி னுள்ளயாத் தலைப்பே.

முற்றிற்று.

வேண்டியவர்கள் இப்புத்தகங்களை அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்ரீரமண மஹர்ஷிகள் அருளிச்செய்தவை.

ரமணகீதை மூலம் (நாகரம்).	0	4	0
ஷை (தமிழ் உரையுடன்) ஸாதா பைண்ட்	0	12	0
ஷை ஷை காலிகோ பைண்ட்	1	0	0
ஷை தெலுங்கு லிபி (உரையுடன்).	0	12	0
விவேகசூடாமணி வசனம் (தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம், திருக்கு திருசிய விவேகம், அத்தாமலகம், குருஸ்துதிகளுடன்).	0	7	0
அருணாசல ஸ்துதி பஞ்சகம் (அக்ஷரமணமாலை, பஞ்சரத்னம், பதிகம், அஷ்டகம், பஞ்சகம் அடங்கியது).	0	2	0
தேவிகாலோத்தரம் (ஞானாசாரவிசார படலம்).	0	2	0
உள்ளது நாற்பது (அநுபந்தத்துடன்).	0	1	0
உபதேச ஸாரம் (ஸம்ஸ்க்ருதவியாக்கியானத்துடன்).	0	1	0
ஷை (தமிழ் உரையுடன்).	0	1	0
ஷை (தெலுங்கு உரையுடன்).	0	1	0
ஷை (மலையாளம் மூலம்).	0	0	6
ஸ்ரீரமண சரித அகவல் [M. சிவப்ரகாசம் பிள்ளை அவர்கள் B. A.]	0	4	0
ஹம்ப்ரீஸ் இயற்றிய ஆங்கில ரமணசரிதச் சுருக்கம்	0	3	0

அருணாசல நிவாஸ

ஸ்ரீ ஈச்வர ஸ்வாமிகள் அருளியவை.

திருவண்ணாமலை க்ஷேத்ரபடம் (பஞ்சமூர்த்திகள்கிரிவலக்காட்சியுடன் 23×18)	0	2	0
ஸ்ரீமஹர்ஷிரமண சரிதம் (உபதேச மொழிகள்:— நானார்? உபதேச வுந்தியார், ஆன்ம வித்தை அடங்கியது).	0	5	0
ஸ்ரீ அருணாசல மாகாத்மிய வசனம் (தத்வார்த்தம், க்ஷேத்ரபடம், இங்குள்ள மகான்களின் சரித்ரபடங்களும்அடங்கியது).	0	12	0

ரமணதாசர், கா. சு. சேஷகிரி அய்யரவர்கள் B.A.

எழுதியவை.

உத்தம பக்தர்கள்.	0	2	0
உத்தம பத்தினிகள்.	0	2	0
உதயணன் கதை.	0	5	0
இகபாசுகம்.	0	8	0
ஈச்வரலீலை.	0	8	0
டஜன் வெபன்ஸ் (இங்கிலீஷ்).	0	8	0
மகா பாரத வசனம் (முதற்பாதி).	1	0	0
ஷை (Part I) இங்கிலீஷ்.	0	12	0

ஸ்ரீ ரமணீயவாணி புத்தகாலயம்.

திருவண்ணாமலை.